மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண். 98/2023 நாள்– 19.08.2024

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. K.மாரிராஜா, Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– ஜெயராஜ்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 09.06.1969 – நில அடமான பத்திரம் – கணினி நகல் – வா.சா.ஆ.1

2) வில்லங்க சான்று – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.2

3) 21.12.1987 – நில அடமான பத்திரம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.3

4) 09.02.2005 – வாதிகள் பெயரில் உள்ள கிரைய பத்திரம் – அசல் – வா.சா.ஆ.4

5) வில்லங்க சான்று – கணினி நகல் – வா.சா.ஆ.5

6) வழக்கிடை சொத்தில் 2 ம் வாதி மற்றும் அவரது மனைவி அமுதா விவசாயம் செய்து வருவதற்கான 1429 பசலி அடங்கல் – அசல் – வா.சா.ஆ.6

7) 21.10.2020 – வழக்கிடை சொத்தில் 2 ம் வாதி மற்றும் அவரது மனைவி அமுதா விவசாயம் செய்து வருவதற்கான 1430 பசலி அடங்கல் – அசல் – வா.சா.ஆ.7

8) 18.11.2021 – வழக்கிடை சொத்தில் 1ம் வாதி மற்றும் அவரது மனைவி அம்சவேணி விவசாயம் செய்து வருவதற்கான 1431 பசலி அடங்கல் – அசல் – வா.சா.ஆ.8

9) 20.11.2022 – வழக்கிடை சொத்தில் 1ம் வாதி மற்றும் அவரது மனைவி அம்சவேணி விவசாயம் செய்து வருவதற்கான 1432 பசலி அடங்கல் – அசல் – வா.சா.ஆ.9

10) 19.10.2023 – வழக்கிடை சொத்தில் 1ம் வாதி மற்றும் அவரது மனைவி அம்சவேணி விவசாயம் செய்து வருவதற்கான 1433 பசலி அடங்கல் – அசல் – வா.சா.ஆ.10

11) 28.11.2020 – வாதிகளின் தகப்பனாருடைய இறப்பு சான்று – அசல் – வா.சா.ஆ.11

12) 29.12.2022 – வாதிகளின் பெயரில் அரசுக்கு செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது – அசல் – வா.சா.ஆ.12

13) 03.01.2023 – மின் இணைப்பு பெயர் மாற்றம் உத்தரவு – அசல் – வா.சா.ஆ.13

14) 09.08.2023 – சாத்தூர் வட்டம் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா மாறுதல் உத்தரவு – கணினி நகல் – வா.சா.ஆ.14

15) 24.09.1919 – சின்னத்தேவர், லெட்சுமியம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பதிவு ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.15

16) 15.07.1925 – லெட்சுமியம்மாள், லிங்கவன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த குத்தகை பதிவு ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.16

17) 16.06.1927 – லெட்சுமியம்மாள், இராமசாமி அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பதிவு ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.17

18) 07.09.1946 – இராமசாமி வகையறா வாதிகளின் தாத்தா கிருஷ்ணசாமி அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பதிவு ஆவணம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.18.

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)